# நீரிழிவு நோய் வகை-1

நீரிழிவு நோய் எதிர்ப்பு அமைப்பு கணையத்தில் பீட்டா செல் உற்பத்தியினை தடை செய்வதினால் இன்சுலின் சுரப்பு பாதிப்பு அடைகிறது.





## நீரிழிவு நோய் வகை-1ன் அறிகுறிகள்

தீவிர தாகம், திடீர் எடை இழப்பு, மங்கலான பார்வை, அடிக்கடி சிறுநீர் கழித்தல், தீவிர சோர்வு, மனநிலை மாற்றங்கள், அதிக பசி, வாந்தி, குமட்டல், நோய் தொற்று, வயிற்று வலி, அசிடோன் அமில சுவாசம்.

## நீரிழிவு நோய் வகை-1ன் மேலாண்மை முறைகள்

- மருத்துவருடன் ஆலோசனை
- முறையான பரிசோதனை
- சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கங்கள்
- முறையான எடை பரிசோதனை மற்றும் உயரம் பரிசோதனை.
- மாதம் ஒருமுறை அல்லது இரு மாதத்திற்கு ஒருமுறை இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை, தேவையெனில் வீட்டிலேயே இரத்தம் மற்றும் சிறுநீரில் சர்க்கரையின் அளவு பரிசோதனை செய்தல் வேண்டும்.





## வீட்டில் நீரிழிவு நோய் வகை-1ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாதுகாக்கும் முறைகள்



- வீட்டில் பெற்றோர்கள் குழந்தை மீது சிறப்பு தனி கவனம் செலுத்த வேண்டும்.
- கால்கள் மற்றும் பாதங்கள் மீது சிறப்பு தனி கவனம் செலுத்த வேண்டும்.



- உணவு உட்கொண்ட பின்பு இன்சுலின் ஊசி போட வேண்டும்.
- குழந்தைகளுக்கு சுயமாக (அல்லது) தன்னிச்சையாக இன்சுலின் ஊசி போட்டுக்கொள்ள பழக்கப்படுத்த வேண்டும்.
- பெற்றோர்கள் குழந்தைகள் ஊசி போட்டுக் கொள்ளும் போது மேற்பார்வை செய்ய வேண்டும்.

## நீரிழிவு நோய் வகை-1ஆல் பாதிக்கப்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகளை பாதுகாக்கும் முறைகள்

- பள்ளி செல்லும் குழந்தைகளின் பெற்றோர்கள் வகுப்பு ஆசிரியரிடம் அறிகுறிகள் பற்றியும் மேலும் அதற்கான மருத்துவ மேலாண்மை பற்றியும் தெளிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை செய்தல் வேண்டும்.

## சைவ உணவு பழக்கம் உள்ள நீரிழிவு வகை-1ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாதுகாக்கும் முறைகள்



- சைவ உணவு பழக்கம் உள்ள குழந்தைகளுக்கு நார் சத்து, புரத சத்து, வைட்டமின்-டி, கால்சியம் நிறைந்த காய்கறிகள், பழ வகைகள், கீரை வகைகள், பருப்பு, தானியங்கல் வழங்கலாம்.

## நீரிழிவு நோய் வகை-1க்கான நவீன மருத்துவ முறைகள்

- கணையம் மாற்று அறுவை சிகிச்சை
- செயற்கை கணையம் செயல்படும் கருவி
- மரபியல் ஐலெட் செல் தூண்டுதல்
- ஐலெட் செல்-ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை

## நீரிழிவுநோய் வகை-1ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாதுகாக்கும் வேறு சில முக்கிய முறைகள்

- நீரிழிவு நோய் வகை-1 குழந்தைகளை அவர்கள் சிறுநீர் கழிக்க விரும்பும் அல்லது தேவைப்படும் போது அனுப்பி வைக்க வேண்டும்.



- குழந்தைகள் இனிப்பு (வெல்லம், வெல்லம் கலந்த உணவு பண்டங்கள்) எப்போதும் கொடுத்து வைக்க வேண்டும்.
- குழந்தைகளை தனியாக வெளியில் செல்ல அனுமதிக்கக் கூடாது. விளையாடும் போதும் பெற்றோர் முன்னிலையிலேயே விளையாட அனுமதிக்க வேண்டும்.
- குழந்தைகளை நோயாளிகள் என தனிமைப்படுத்த கூடாது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் என கூறுதல் கூடாது.
- குழந்தைகளிடம், அவர்களின் பெற்றோர்களை தொடர்புகொள்ள தேவைப்படும் (செல் போன், தொலைபேசி எண்) கொடுத்து வைக்க வேண்டும்.







**இன்சுலின் ஊசி மருந்து போட்டுக்கொள்ள வேண்டிய இடங்கள் மற்றும் ஊசி போடும் முறைகள், மேலும் அதனால் ஏற்படும் விளைவுகள்**

- இன்சுலின் ஊசியினை திரும்ப திரும்ப ஏற்கனவே போட்ட இடத்தில் போட்டுக் கொள்வதனால் ஆறாத புண் ஏற்படும்
- லிப்போடிஸ்டிரோபி- இயற்கை கொழுப்பு திசு சிதைவு
- லிப்போஹைப்பர்டிரோபி- இயற்கை கொழுப்பு திசு திரள் கட்டி இது போன்ற பிரச்சனைகள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

- ஆலோசனை பெற்ற முறையான உடற்பயிற்சி, உணவு கட்டுப்பாடு, பெற்றோர், உடன் பிறந்தவர்கள், நண்பர்கள், உறவினர்களின் அன்பு மற்றும் அரவணைப்பு, நம்பிக்கை இவற்றினால் அனைத்தையும் வெல்லலாம்.
- நீரிழிவு நோய் வகை-1ஆல் பாதிக்கப்பட்ட பல பெறும் பிரபலங்கள் அனைத்து துறைகளிலும் வெற்றி பெற்று உள்ளனர். நம்மாலும் முடியும்.




ஒன்றுபடுவோம்!
நீரிழிவு நோய் இல்லா புது உலகை
படைப்போம்!

# நீரிழிவு நோய் வகை-1

## மேலாண்மை முறைகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள்

